# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | திருவுடல் திரு இரத்தப் பெருவிழா | 07 ஜூன் 2026


**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்:

திருஅவை - ஒருங்கிணைந்து வாழ்தல்



# திருஅவைக்காக முன்னெடுப்பவர்களுக்கு ஆற்றல் அளித்தல்

சமூகப் பகுத்தறிவைப் பயிற்சி செய்தல், செவிமடுக்கும் கலாச்சாரத்தை உருவாக்குதல் மற்றும் ஒத்துழைத்தல் (FD#143) என்ற மேய்ப்புப்பணி பாதைகளை நாம் இந்த மாதத்தின் மையக்கருத்தாக ஆர்வத்துடன் நோக்குகிறோம். மேலும் இந்த மாதம் நமது நம்பிக்கையின் மாபெரும் முன்னெடுப்பாளரான, கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழாவையும் நாம் சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

வாழ்க்கையில் நாம் சீடர்களாக மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும், ஒரு தீப்பொறியுடன், ஒரு மெல்லிய கிசுகிசுப்புடன் நம்மை ஒருபடி முன்னோக்கிச் செல்ல அழைக்கும், ஒரு மெல்லிய குரலுடன் தொடங்குகிறது. பெரும்பாலும், 'நான் பிறகு செய்கிறேன்' மற்றும் ஒருவேளை என்னால் முடியாது' போன்ற தாமதங்களையும் சாக்குப்போக்குகளையும் நாமே உருவாக்கிக்கொள்கிறோம்.

Celebrate Listen Walk (cf. Is 2:2-5) MPC2026

அப்படியானால், ஒரு நல்ல செயலை சமூகத்திற்காகச் செய்யத் தொடங்குவதை முன்னெடுக்க என்ன தேவை? தூய ஆவியார் பல்வேறு கொடைகளையும், திறமைகளையும் கொண்டு நமக்கு திடமூட்டுகிறார் என்று புனித பவுல் நமக்கு நினைவூட்டுகிறார். இந்தக் கொடைகள் பின்னர் நம்மை திருத்தூதர்களாகவும், இறைவாக்கினர்களாகவும் நற்செய்தி அறிவிப்பாளர்களாகவும் திகழ்ச்செய்கின்றன. மேலும் முக்கியமான தூதுரைப்பணிக்காக புனிதர்களை தயார்ப்படுத்துகின்றன. இப்போது இந்த கொடைகள் உண்மையில் நம்மிடம் இருக்கின்றன என்பதை அறிந்த நிலையில், கிறிஸ்துவின் உடலைக் கட்டியெழுப்புவதற்கான அழைப்பிற்கு நாம் எவ்வாறு மறுமொழி தரமுடியும்?

முன்னெடுப்பவர் யார்? நாம் அவர்களுக்கு எவ்வாறு ஆற்றல் அளிக்கமுடியும்? நமது முன்னெடுப்பையும் முன்னெடுப்பதற்கான அழைப்பையும் நாம் எவ்வாறு அடையாளம் கண்டுகொள்வது?

முன்னெடுப்பவர் என்பவர், பங்கு அல்லது பணிக்குழு சூழலில் உள்ள ஒரு வழக்கமான தலைவர் அல்ல; இந்த நபர் எந்தவொரு நிலையிலிருந்தும் வரலாம்; அவர் ஆண்டவராகிய திருவுடலாகிய திருஅவைக்காக, அவர் செய்யும் பணியில் விருப்பத்துடனும், முனைப்புடனும் பங்கேற்பவராக இருப்பார். அத்தகைய நபருக்கு ஆற்றல் அளிப்பது ஒரு நுட்பமான பணியாகும். தலைமைத்துவ வட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் எழுந்து நின்று பங்களிக்க நடவடிக்கை எடுக்கக்கூடிய இடங்களை நாம் உருவாக்கியுள்ளோமா? நம்பிக்கையாளர்கள் தங்கள் உள்ளத்தைப் பகிர்ந்துகொள்ளும்போது, நிகழும் உண்மையான உரையாடல்களில் தான் உண்மை அடங்கியுள்ளது. நாம் இவற்றுக்கு செவிசாய்க்கும்போது தான், ஆவியானவர் செயல்பட்டு, அங்கிருந்து சிலரின் மாற்றத்தையும் புதுப்பித்தலையும் முன்னெடுக்க அனுமதிக்கிறார்.

மற்றவர்கள் அல்லது வேறுயாராவது முன்முயற்சி எடுப்பார்கள் என்று பேசுவது எளிது. நாம் அடிக்கடி நம்மைத் தகுதியற்றவர்கள் என்றோ அல்லது தகுதியில் குறைந்தவர்கள் என்றோ நினைக்கிறோம். ஒரு தேவைக்கோ, ஒரு கூக்குரலுக்கோ, ஒரு குறைபாட்டுக்கோ பதிலளிப்பது என்பது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகத் தோன்றுகிறது. நேர்மறை தன்மை, நன்மை, ஒளியை துரத்திக்கொண்டிருக்கும் இந்த உலகில், இருளில் ஒளியையும் துக்கமும் சோகமும் மூழ்கடிக்கும் இடத்தில் நம்பிக்கையையும் நாம் எவ்வாறு தொடங்கமுடியும்? அந்தச் சிறிய அசைவு, மீண்டும் ஒரு பார்வை, அல்லது விடாப்பிடியான சிந்தனை ஆகியவை ஏதேனும் ஒன்றைத் தொடங்குமாறு ஆண்டவர் உங்களை அழைக்கிறார் என்பதற்கான அறிகுறிகளாக இருக்கலாம் . ஆம் என்று சொல்லுங்கள். ஆவியானவர் உங்களுக்கு ஆற்றல் அளிக்க அனுமதியுங்கள்.

**இன்றைய இறைவார்த்தை:**

இணைச்சட்ட நூல்: 8:2-3, 14-16

திருப்பாடல் 148: 12-15, 19-20

1 கொரிந்தியர் 10: 16-17

யோவான் 6: 51-58

ஒன்றித்துப் பயணிக்கும் திருஅவை என்பது செவிமடுக்கும் ஒரு திருஅவையாகும். செவிமடுத்தல் என்பது "வெறுமனே கேட்பதைவிட மேலானது" என்பதை அது உணர்கிறது. அது ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள ஏதேனும் ஒன்றைக் கொண்டிருக்கும் ஒரு பரஸ்பர செவிமடுத்தலாகும்

*- திருத்தந்தை பிரான்சிஸ்*


INTERNAL CIRCULATION ONLY
BUL 23/2026

**வெளியீடு:** மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org